57, நொறிஸ் கனல் றோட்டு
கொழும்பு - 10.
10 ஜனவரி 1999

கௌரவ அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப்,
தேசியத் தலைவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
'தாருஸ்ஸலாம்'
53, வொக்சோல் லேன்
கொழும்பு - 02.

அன்புடையீர்,

'அஸ்ஸலாமு அலைக்கும்'

**தேங்கிக் கிடக்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்ட அமுலாக்கம்**

தங்களின் பெருமுயற்சியின் பயனாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஏற்பட்டது. இதற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கும், தங்களுக்கும் இலங்கை முஸ்லிம்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

பல்கலைக்கழகச் சட்டம் 24A பிரிவின் கீழ் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்படுவதற்கான மந்திரி சபையின் அங்கீகாரம் 1995 ஜூலை 17ஆம் திகதி பெறப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு உடனடியாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயற்சிக் கல்லூரியிலும், ஒலுவிலும் தேவையான அகநிலை அமைப்புக் கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்பு தங்களின் அதிகாரத்துக்குட்பட்ட கப்பல்துறை துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் ஒப்படைப்பதற்கும், தென்கிழக்குப்

MI 011899 B

பல்கலைக்கழகக் கருத்திட்ட நிர்மான நிகழ்ச்சித் திட்டத்தைப் பயனுறுதியுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒரு விஷேட பணிக்குழுவை நியமிப்பதற்குமான மந்திரி சபை அங்கீகாரமும் பெறப்பட்டது. இதன் அடிப்படையில் எனது தலைமையிலான விஷேட செயற்குழுவை 1995 ஜுலை 28ஆம் திகதி தாங்கள் நியமித்தீர்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

விஷேட பணிக்குழு கிரமாக மாதாந்தம் கூடித் துரிதமாகச் செயற்பட்டதின் காரணமாகவும், தங்களின் அயராத முயற்சியினாலும் கல்வி உயர்கல்வி அமைச்சர் கௌரவ றிச்சட் பதிரண அவர்களினால் 1996, மார்ச்சு 27ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி பரிபூரணமான ஒரு பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. ஒலுவிலில் 122 ஏக்கர், 3 றூட்டு 01 பேர்ச்சஸ் காணியை உடனடியாகச் சுவிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு நில அளவைத் திணைக்களத்தினால் காணியை அளந்து 95/465ஆம் இலக்கப்படமும் தயாரிக்கப்பட்டது. தங்களின் அங்கீகாரத்துடன் பின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கான தலைமைத் திட்டம், உத்தேச நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதிக்கணக்கீடு நிர்மாணச் செயல்முறைத்திட்டம் ஆகியவை விஷேட பணிக்குழுவால் தயாரிக்கப்பட்டன.

அடிக்கடி ஏற்படும் வன்செயல்களாலும் திருப்திகரமற்ற பாதுகாப்பு நிலைமை காரணமாகவும் வேகம், வினைத்திறன் மற்றும் தீவிர மேற்பார்வை தொடர்ச்சியாகப் பேணப்படாவிடில் இப்பல்கலைக் கழகத்தின் விரிவடைந்து செல்லும் மாணவர் தொகையினருக்குப் போதிய இடவசதியளிக்கும் வேலைத் திட்டம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையமுடியாது போய் விடுமென்ற அச்சம் ஏற்பட்டது. மேலும் இத்தகைய விரைவுபடுத்தப்பட்ட நிர்மான வேலைத்திட்டத்தை அமுல் நடத்தக்கூடிய அனுபவமும் பொறுப்புமுள்ள கட்டட ஒப்பந்தக்காரர்கள் இப்பகுதியில் இல்லாத காரணத்தால் நிர்மான

வேலைகளை விரைவுபடுத்துவதற்காகக் கப்பல்துறை, துறைமுகங்கள் புனர்நிர்மாணம், புனர்அமைப்பு அமைச்சினால் என்னை தேசிய பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உப ஒப்பந்தக்காரராக நியமிக்கப்பட்டவுடன் எனக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக விஷேட பணிக்குழுத் தவிசாளராக தொடர்ந்து செயலாற்ற முடியாத நிலை ஏற்பட்டதையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். அதன்பின் புதிதாகத் தங்களால் நியமிக்கப்பட்ட விஷேட பணிக்குழுக் கூட்டம் வருடக்கணக்காக நடைபெறவேயில்லை. இதன் காரணமாகத் தென்கிழக்குப் பல்லைக்கழக அபிவிருத்தித்திட்ட அமுலாக்கம் சம்பந்தமான அலுவல்கள் யாவும் தேங்கிக் கிடப்பதைத் தங்களுக்கு மிக மனவருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கான தலைமைத் திட்டத்தின்படி சகல வேலைகளும் 1998 இல் முடிவுற்றிருக்க வேண்டும். ஆனால் மூன்று கட்டங்களாகத் திட்டமிடப்பட்ட 34 வேலைகளில் முதல்கட்ட மூன்றே மூன்று வேலைகள் மட்டுமே அரைகுறையாக முடிந்துள்ளது.

கீழ்காணும் ஏனைய வளாகங்களுக்கான காணிச்சுவிகரிப்பு ஆரம்ப வேலைகள் கூட இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

கடல்சார் ஆய்வுகள் மற்றும் மீன்பிடியியல் - அட்டாளைச்சேனை
பொறியியல் மற்றும் கைத்தொழிற் பேட்டை - அக்கரைப்பற்று
விவசாயபீடம் - சம்மாந்துறை
சட்டபீடம் - கல்முனை
மருத்துவபீடமும் போதனா வைத்தியசாலையும் - பாலமுனை
அறபு, மற்றும் இஸ்லாமியக் கல்விகள் பீடம் - பொத்துவில்
பௌத்த தத்துவ ஞானபீடம் - தீகவாப்பி
இந்து தத்துவ ஞானபிடம் - திருக்கோவில்

இது எமது செயற் திறனுக்கு ஏற்பட்டுள்ள பெரும் அவமானம்

மட்டுமன்றி எமது மக்களுக்கும் மண்ணுக்கும் நாம் செய்யும் பெருந்துரோகமாகும்.

நெற்சந்தைப்படுத்தும் சபையின் பழைய அரிசி ஆலை புனர்நிர்மான வேலை ஒப்பந்தம் சம்பந்தமாக காலத்துக்காலம் எனது தெண்டிப்பின் பேரில் ஏற்படுத்தப்பட்டுத் தங்கள் தலைமையில் நடந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட அனேகமான தீர்மானங்கள் பிரதம ஒப்பந்தக்காரரான தேசிய பொறியியல் கூட்டுத்தாபனத்தால் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் செய்த வேலைகளுக்கும் ஒப்பந்த வேலைகளைத் தொடர்ந்து செய்து முடிப்பதை சோரவிட்டதற்குமான நஷ்டயீடாக எனக்கு நியாயப்படி சேரவேண்டிய பல இலட்சக்கணக்கான ரூபாய்களும், ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நிர்மாண வேலைகளுக்கு கொள்வனவு செய்த கட்டிடப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளும் எந்தவித நடவடிக்கையுமின்றி வருடக்கணக்காக வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. தங்களின் அமைச்சினால் நியமிக்கப்பட்ட உப ஒப்பந்தக்காரரான எனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விரைவில் நியாயமாகத் தீர்த்து வைக்குமாறு தங்களை மிகப்பணிவாக வேண்டிக் கொள்கிறேன்.

ஒலுவில் வளாக நிர்மான வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர்களும், மற்றும் உத்தியோகத்தர்களும் கிரமாக வேலைக்கு உரிய நேரத்தில் வருவதில்லை. பல நாட்கள் வேலைக்கு வராமலே சம்பளம் எடுக்கின்றனர். தென்கிழக்குப் பல்கலைக்கழகத் திட்ட அமுலாக்கலுக்கு கொழும்பு விஜயவர்தன மாவத்தை (மகல்லம் றோட்டு) யில், ஏற்படுத்தப்படட விஷேட செயற்குழுக் காரியாலயமும், அங்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் தகுமான கடமைகளும் முறையான மேற்பார்வையும் இல்லாமல் செயலற்ற நிலையில் உள்ளது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின் இணைப்பு 'ஆ' வில் விபரிக்கப்பட்டிருக்கும் தென்கிழக்குப் பல்லைக்கழக அபிவிருத்தி நிதியம் இன்னமும் முறையாக ஏற்படுத்தப்படவே இல்லை.

தேங்கிக் கிடக்கும் சகல வேலைகளையும் துரிதப்படுத்துவதற்கு தங்களுக்கு நம்பிக்கையும் விசுவாசமுள்ள திறமை மிக்க ஒருவரைத் தவிசாளராகவும், ஏனைய அங்கத்தவர்களையும் உடனடியாக நியமித்து தென்கிழக்குப் பல்கலைக்கழக விஷேட பணிக்குழுவை கிரமமாக இயங்கச் செய்வதாலும், அரம்பத்தில் தென்கிழக்குப்பல்கலைக்கழக அபிவிருத்தியில் தங்களுக்கிருந்த உற்சாகமும் அக்கறையும் மீண்டும் ஏற்படுவதானால் மட்டும்தான் தேங்கிக் கிடக்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்ட அமுலாக்கம் பூரண நிறைவு பெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள

எம்.ஐ.எம்.முஹியத்தீன்
ஒருங்கிணைப்புச் செயலாளர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

பிரதி : கௌரவ றஊப் ஹக்கீம்
பொதுச் செயலாளர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 01 |
| 2. | தென்-கிழக்கு பல்கலைக்கழகத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான பனிக்குழு-பின் இணைப்பு 'அ' | 07 |
| 3. | தென்-கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தை ஏற்படுத்துவதற்கான பிரேரணை-பின் இணைப்பு 'ஆ' | 10 |
| 4. | தென்-கிழக்கு பல்கலைக்கழக-அபிவிருத்தி நிதியம் | 11 |
| 5. | தென்-கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான தலைமைத் திட்டம்-பின் இணைப்பு 'இ' | 15 |
| 6. | தென்-கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் வளாக நிர்மாண நடைமுறைப்படுத்தல் கோஷ்டி | 17 |
| 7. | தென்-கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் வளாக உத்தேச நிர்மாண நடவடிக்கைத் திட்டம் - 1996 | 18 |
| 8. | தென்-கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் வளாகம் நிர்மாணச் செயல்முறைத் திட்டம் - 1996 | 19 |

# 1. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## அம்பாறை மாவட்டத்தில் ஒலுவிலில் தென்-கிழக்கு பல்கலைக்கழகத்தை நிறுவுதல்

அம்பாறை மாவட்டதில் தென்-கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைத்து, கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அவர்களது உயர்கல்வியைத் தொடருவதற்கு உதவுவதற்கு 12.07.95 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது ஆரம்பத்தில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஏற்படுத்தப்படவிருக்கும் வசதிகளையும், பின்னர் ஒலுவிலில் வழங்கப்படவிருக்கும் அகநிலையமைவு வசதிகளையும் உபயோகித்துச் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனையில் பல்கலைக்கழகக் கல்லூரி அமைந்ததிலிருந்து பல தமிழ் மாணவர்களும் இப்பல்கலைக் கழகத்தில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்தனர். பொ.ஐ.மு அரசின் கொள்கைகளுக்கிணங்க, பல்கலைக்கழகக் கல்வியின் பயன்கள் மாணவர் சமுதாயத்தின் சகல பிரிவுகளையும் சென்றடைய வேண்டுமெனில், இயன்றளவு விரைவில் சகல பல்கலைக் கழகங்களிலுமுள்ள வசதிகளை காலத்துக்கேற்ப உயர்நிலைப் படுத்துதல் வேண்டியது அவசியத் தேவையாகியது.

முதலில் அடித்தள அமைப்பு மற்றும் ஆரம்ப வசதிகள் ஒலுவிலில் உள்ள நெற்சந்தைப்படுத்தும் சபைக்குரிய கைவிடப்பட்ட அரிசி ஆலை வளவில் அமைத்து அட்டாளைச் சேனையிலுள்ள மாணவர்களை ஒலுவிலுக்கு இடமாற்றம் செய்வதற்கு வசதியாக வேலைகள் 1996 ஜனவரியில் பூரணப்படுத்தப்படவும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும், அட்டாளைச் சேனையில் பல்லைக்கழகக் கல்லூரி ஆரம்பமான பின்னர், ஒலுவிலுள்ள நிரந்தரமான இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகள் மிகவும் மெதுவாகவே முன்னேறியது.

தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமை, மற்றும் இத்தகைய விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தக் கூடிய விதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பமைப்பு, குறிக்கோள்கள் மற்றும் மூலவளங்கள் அமைந்திருக்காமை என்பன தாமதத்துக்கான முக்கிய காரணங்களாகும்.

அட்டாளைச்சேனையில் கிடைக்கும் வசதிகள் ஏற்கனவே வர்த்தமானியில் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ள விஞ்ஞானம் மற்றும் சட்ட பீடங்களுக்கு இடமளிப்பதற்குப் போதுமானவையல்ல. மேலும், தென்-கிழக்குப் பல்கலைக்கழகமொன்று நிறுவப்பட்ட பின்னரும், கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் பயிலத் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் மாணவர்களை அங்கு தொடரவேண்டு மென்று பலவந்தப்படுத்துவது உசிதமானதல்லவென்ற உண்மையையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில் இருந்த ஒரே ஒரு மாற்றுவழி அவர்களைத் தற்காலிக அடிப்படையில் வேறு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதாகும். இது மாணவர்களுக்கு மட்டுமன்றி, இப்பல்கலைக்கழகங்களுக்கும் பல பிரச்சினைகளை உருவாக்கியது. வேகம், வினைத்திறன் மற்றும் தீவிர மேற்பார்வை தொடர்ச்சியாக பேணப்படாவிடில் இப்பல்கலைக்கழகத்தின் விரிவடைந்து செல்லும் மாணவர் தொகையினருக்கு இடமளிக்கும் விதத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாது போய்விடுமென்ற அச்சம் ஏற்பட்டது.

இச்சூழ்நிலைகளின்கீழ், இப்பல்லைக்கழகத்தின் அபிவிருத்தியில் காலம் மிகவும் ஜீவாதாரமான முக்கியம் வாய்ந்த ஒன்றாகவிருந்தது. அகநிலையமைவு அபிவிருத்தி குறித்த பூரணப்பொறுப்பும் கப்பற் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சினால் கையாளப்பட்டமையால் அட்டாளைச்சேனைப் பல்கலைக்கழகக் கல்லூரியை ஒரு சாதனையாகக் குறுகிய காலத்தினுள் கூடும்.

ஆரம்பிக்கக்கூடியதாகவிருந்தது. இதற்கு மேலுமொரு காரணம் ஒலுவிலிருந்து 15 மைல் தூரத்தில் புனர்வாழ்வு அமைச்சின் கிளையொன்று ஏற்கெனவே தாபிக்கப்பட்டு, வினைத்திறனுடன் கருமமாற்றிக் கொண்டிருந்தமையாகும். புனர்வாழ்வு அமைச்சு, உயர்கல்வியமைச்சோடு இடையறாது தொடர்பு கொண்டு, தென்-கிழக்குப் பல்கலைக்கழக அகநிலையமைவு அபிவிருத்திப் பணிகளைக் கையாளுவதற்கும், மேற்பார்வை செய்வதற்குமுரிய சகல வசதிகளையும் கொண்டிருந்தது.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், கட்டம் கட்டமாக இடம்பெறவிருக்கும் தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிரத்திக்கு 500 மில்லியன் இலங்கை ரூபாக்கள் தேவைப்படுமென்று முன்மதிப்பீடு செய்யப்பட்டது. இத்தகைய அபிவிருத்தி நன்கு தயாரிக்கப்பட்ட தலைமைத்துவத் திட்டத்தின் கீழ் இடம்பெறுவதே நீண்ட கால நோக்கில் உசிதமானதாகும். பல்கலைக்கழக வளாகங்களினதும், கட்டிடங்களினதும் நிர்மாணக்கலை வடிவமைப்பு பல்கலைக்கழகக் கல்விக்கு பொ.ஐ.மு அரசாங்கத்தின் பங்களிப்பின் நிரந்தரச் சின்னமாக நிலைக்க வேண்டும் என்பதால் கட்டிடக்கலை, பொறியியல் மற்றும் நிர்மாண முகாமைத்துவ சேவைகளை வழங்குவதற்கு மதிப்பு மற்றும் தகுதிவாய்ந்த கட்டிடக் கலைஞர் மற்றும் பொறியியலாளர் நிறுவனமொன்றின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவது அவசியமாயிருந்தது.

கப்பற் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, மற்றும் புனரமைப்பு அமைச்சு நடாத்திய விசாரணைகளிலிருந்து இத்தகைய ஆலோசனை மற்றும் நிர்மான முகாமைத்துவ சேவைகளின் ஆகு செலவு மொத்த நிர்மான ஆகு செலவில் ஆறு முதல் ஏழு வீதம் வரை ஆகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. கட்டிடக்கலை நிறுவனங்கள் ஆலோசனை சேவைகளை வழங்க முன் வந்தாலும், தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமை காரணமாக கட்டிடக்கலை நிறுவனங்களின் பிரதிநிதிகள் வேலை இடம் பெறும் தலத்துக்கு விஜயம் செய்து, ஒலுவிலில் வேலை செய்வதை விரும்பாதிருக்கக்

டிசைன் கொன்சோட்டியம் லிமிட்டட் இச்சவாலுக்கு முகங்கொடுப்பதற்குத் தாமாக முன்வந்து விருப்பம் தெரிவித்தது இந்நிலையில் பெரிதும் ஆறுதலளிக்கும் ஓர் அம்சமாக இருந்தது. அவர்கள் நிர்மாண முகாமைத்துவத்தோடு சேர்த்து, மொத்தக் கட்டிடக்லை மற்றும் பொறியியல் வடிவமைப்புகளை 4% ஆன மிகவும் போட்டித்தகவுள்ள கட்டணத்தில் பொறுப்பெடுக்கத் தயாராக இருந்தனர். அவர்கள் ஏற்கெனவே வேலையை ஆரம்பித்துள்ளதோடு, வடக்கிலும், கிழக்கிலும் எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பகைமை அதிகரித்துள்ள போதிலும், இந்நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகள் ஒலுகிலுக்குப் பல தடவைகள் விஜயஞ் செய்தனர்.

கப்பற் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, மற்றும் புனரமைப்பு அமைச்சு கருத்திட்டத்தின் கூட்டிணைப்பு மற்றும் மேற்பார்வைப் பொறுப்புகளை கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு, கப்பற் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அரசுக்கு நிதிப்பளுவை ஏற்படுத்தாது, இப்பல்கலைக்கழக அபிவிருத்தியில் ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த வெளியார்களைக் கொண்ட ஓர் அமைச்சரவைப் பணிக்குழுவின் கரங்களில் ஒப்படைத்துத் தீர்மானிக்கப்பட்ட கால இலக்குகளை ஈட்டிக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

இதற்காகப் பின்வரும் விடயங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது:

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 பிரிவின் கீழ், அம்பாறை மாவட்டத்தில் இட அமைவு பெறுவதும், தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி என அழைக்கப்படுவதுமான ஓர் உயர்கல்வி நிலையத்தைத் தாபித்தல்.

அது இறுதியாக இட அமைவு பெறும் ஒலுவிலில் அபிவிருத்தி ஏற்படும்வரையில் தற்போது அட்டாளைச்சேனை ஆசிரியர்

பயிற்சிக் கல்லூரியிலுள்ள தற்காலிக வசதிகளுடன் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியைத் தாபித்தல் :

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'இடம் பெயர்ந்த மாணவர்கள்' தென் - கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியில் தமது உயர்கல்வியைத் தொடர உதவும் விதத்தில் அட்டாளைச் சேனையிலும், ஒலுவிலிலும் அகநிலையமைப்பு மற்றும் ஏனைய வசதிகளை நிர்மாணித்தல் அல்லது புனர்நிர்மாணம் செய்வதற்கு கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு மூலதன நிதிகளை ஒதுக்கீடு செய்தல்.

இந்த அங்கீகாரம் நிர்மாண நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தலை இலகுவாக்குவதற்கும், விரைவு படுத்துவதற்கும் பின்வரும் வழிமுறை நடவடிக்கைகளை விதந்துரைக்கின்றது:

அ) நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையம் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சாகவிருத்தல்:

ஆ) நடைமுறைப்படுத்தல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் நேரடியாக மேற்பார்வை செய்வதற்கு கப்பல்போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் கீழ், பின்னிணைப்பு - அ வில் விபரிக்கப்பட்டுள்ளவாறான ஒரு பணிக்குழுவை ஏற்படுத்துதல்:

இ) கருத்திட்டத்துக்கு அவசியமான நிதிகளைப் பயனுறுதியுள்ள வகையில் திரட்டுவதற்கும், நிதி நிர்வகிப்பதற்கும், பின்னிணைப்பு- 'அ' யில் கூறப்பட்டுள்ள நிலைமைகளுக்கேற்ப ஓர் அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குதல்.

உ) பின்னிணைப்பு - 'இ' யில் விபரிக்கப்பட்டுள்ள தலைமைத் திட்டத்துக்கிணங்க நடைமுறைப்படுத்தல் இடம் பெறல்.

ஊ) ஒவ்வொரு படிநிலையும் பூரணமடையும் போது கட்டிடங்கள்; தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் உபகரணங்கள் பல்கலைக்கழக முறைமையின் கீழ் நிர்வாகம் செய்யப்படுவதற்காக கல்வியமைச்சுக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் கையளிக்கப்படல்.

எனவே பின்வரும் விடயங்களுக்கு மீண்டுமொரு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டது :

கல்வியமைச்சு மற்றும் உயர்கல்வியமைச்சோடு கலந்தாலோசித்து, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அவசியமான கட்டிடங்களைத் திட்டமிடல், புனரமைத்தல் மற்றும் நிர்மாணஞ் செய்யும் பணியைக் கப்பற் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சுக்குப் பொறுப்பளித்தல்:

கல்வி, உயர்கல்வி அமைச்சரின் அவதானிப்புகளும் ஆராயப்பட்டு, பின்வரும் விடயங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அ) கல்வியமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சோடு கலந்தாலோசித்து, தென்-கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அவசியமான கட்டிடங்களைத் திட்டமிடல், புனரமைத்து மற்றும் நிர்மாணஞ் செய்யும் பணியைக் கப்பற் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சுக்குப் பொறுப்பளித்தல்:

ஆ) தென்-கிழக்குப் பல்கலைக்கழகக் கருத்திட்ட நிர்மாண நிகழ்ச்சித் திட்டத்தைப் பயனுறுதியுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு விஷேட பணிக்குழுவை நியமித்தல்.

பின்னிணைப்பு - 'அ'

## 2. தென்-கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விஷேட பணிக்குழு

*நோக்கம் :*

உத்தேச தென்-கிழக்குப் பல்கலைக்கழகக் கருத்திட்ட நிர்மாண நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்தலை இலகுபடுத்தலும், விரைவு படுத்தலும், மற்றும் உத்தேச தென்-கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கான தளபாடங்கள மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்தலும், விரைவுபடுத்தலும்.

***விஷேட பணிக்குழு அறிக்கையிடவேண்டியது:***

**கௌரவ. கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் விஷேட பணிக்குழுவின் விசாரணை நியதிகள்:**

அ) உத்தேச தென்-கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அவசியமான அகநிலையமைவு மற்றும் கட்டிடங்களைத் திட்டமிட்டு, நிர்மாணித்து அவற்றுக்குத் தேவையான சகல உபகரணங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்;

ஆ) கருத்திட்டத்தைப் பூரணப்படுத்த அவசியமான பல்வேறு வேலைகளையும் பொறுப்பேற்கப் பொருத்தமான நடைமுறைப் படுத்தல் முகவர் நிலையங்களை இனங்கண்டு, விதந்துரைப்புச் செய்தல்;

இ) கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, மற்றும் புனரமைப்பு அமைச்சுக்கும் கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கும் முன்னேற்றத்தைக் தொடர்கண்காணிப்புச் செய்தலும், அறிக்கையிடலும்;

ஈ) கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தோடு ஒட்டிச்செல்லும் நோக்கில் கருத்திட்ட நடைமுறையாக்கத்தின் போது இடம்பெறும் சேர்ந்து குவிதல் நெருக்கடி நிலைமைகளையும், மட்டுப்பாடுகளையும் அகற்றுவதற்குத் திருத்த நடவடிக்கை எடுத்தல்

*விஷேட பணிக்குழுவின் உறுப்பமைவு :*

பணிக்குழு பின்வருவோரை உள்ளடக்கியிருக்கும்:

- கௌரவ. கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் விஷேட பணிக்குழுத்தவிசாளர்;

- கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சிலிருந்து இரு அங்கத்தவர்கள்;

- கல்வி, உயர்கல்வி அமைச்சிலிருந்து இரு அங்கத்தவர்கள்;

- தென்-கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரிப் பணிப்பாளர்;

- தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கருத்திட்டத்துக்கான கருத்திட்ட முகாமையாளர் (கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்படுபவர்).

தென்-கிழக்குப் பல்கலைக்கழகக் கருத்திட்டத்துக்கென இனங் காணப்பட்ட விஷேட பணிக்குழுவின் அங்கத்தவர்கள் பின்வருவோர் :

**ஜனாப்.எம்.ஐ.எம்.மொஹிதீன்** — தவிசாளர்
நில அளவையாளரும், கட்டிடவியலாளரும்,
ஏ.எஸ்.ஐ (இலங்கை) எம்.எஸ்.ஐ (சாம்பியா)
ஏ.எம்.சீ.எஸ்.ஐ (லண்டன்)

**ஜனாப்.எம்.என்.ஜுனைட்** — அங்கத்தவர்
செயலாளர் - கப்பற் போக்குவரத்து,
துறைமுகங்கள், புனர்வாழ்வு
மற்றும் புனரமைப்பு அமைச்சு

**திரு.சீ.அபேகுணவர்தன** — அங்கத்தவர்
மேலதிக செயலாளர்
கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு

**ஜனாப்.எம்.எல்.ஏ.காதர்** — அங்கத்தவர்
பணிப்பாளர்
தென்-கிழக்கு பல்கலைக்கழகக் கல்லூரி

**திரு.யூ.டபிள்யூ.ரொட்ரிகோ** — அங்கத்தவர்
பொறியியல் ஆலோசகர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**கருத்திட்ட முகாமையாளர்** — அங்கத்தவர்
கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள்,
புனர்வாழ்வு, மற்றும் புனரமைப்பு
அமைச்சினால் நியமிக்கப்படுபவர்

**ஜனாப்.ஏ.எஸ்.லெப்பை** — செயலாளர்
பி.எஸ்.சீ (பொறியியல்)
எம்.எஸ்.சீ நீர் மற்றும் சூழல் பொறியியல்
ஆலோசகர் - கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள்
புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு

பின்னிணைப்பு - 'ஆ'

## 3. தென்-கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தை ஏற்படுத்துவதற்கான பிரேரணை

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரப்பகிர்வுக் கொள்கைகளுக்கிணங்க, வடக்கில் கல்முனையையும், தெற்கில் பொத்துவிலையும், கிழக்கில் அம்பாறையையும் எல்லைகளைக் கொண்டு அமைந்துள்ள தென்கிழக்குப் பிராந்தியம் இப்பிரதேசத்தில் பெரும் மக்கட் செறிவைக் கொண்டு வாழும் முஸ்லிம்களின் நிர்வாக அலகாக கலாசார மற்றும் கல்வி அபிலாஷைகளுக்கு உத்வேகமளிக்கும் விதத்தில் ஒலுவிலில் தென்-கிழக்குப் பல்கலைக்கழகத்தை அமைப்பது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர், கௌரவ.எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் விருப்பமாகும். தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம் மாணவர்களுக்கும், இறுதியில் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த ஏழாயிரம் மாணவர் தொகையினருக்கும் சேவை புரியக்கூடிய விதத்தில் ஒரு முன்னுரிமை அடிப்படையில் பூரணப்படுத்தப்பட்டு, கருமமாற்றும் நிலைக்குக் கொண்டுவரப்படுதலே நோக்கமாகும். இக்கருத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் கௌரவ. துறைமுகங்கள், கப்பல்போக்குவரத்து, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி விஷேட பணிக்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். இப்பத்திரம் கருத்திட்டத்துக்கு அவசியமான நிதிகளைப் பயனுறுதியுள்ள வகையில் திரட்டுவதற்கும், நிதிகள் கைதவிர்ப்புகளை நிர்வகிக்கவும் உதவக்கூடிய ஒரு தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவதற்கான பிரேரணை.

## 4. தென்-கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியம்

அரசாங்கத் திறைசேரி, கொடை தருநர் முகவர் நிலையங்கள் மற்றும் தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்போடு தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென்று பிரேரிக்கப்பட்டது. இந்த நிதியத்தை முகாமைத்துவம் செய்யவும், நிர்வகிக்கவும், இன் நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்படும் நிர்மான நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர் கண்காணிப்புச் செய்யவுமென சட்டரீதியாக அமைக்கப்படும் குழுவொன்று தாபிக்கப்படும்.

நிதியத்தின் முகாமைத்துவத்துக்கான குழுவில் ஏழு அதிகாரிகள் இடம்பெறுவர். இவர்களுள் இயைபுள்ள அமைச்சுகளின் பிரதிநிதிகள், திறைசேரிப் பிரதிநிதிகள் மற்றும் கல்வி, வங்கித்துறைகளைச் சேர்ந்த உயர் வாழ்க்கைத் தொழில் வல்லுநர்கள் அடங்குவர்.

நிதியத்துக்குப் பின்வரும் பணத்தொகைகளும், வருமானங்களும் சென்றடையும் :

அ) தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கென காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் சகல பணத்தொகைகளும்.

ஆ) தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கென காலத்துக்குக் காலம் தென்-கிழக்குப் பிராந்திய சபையினால் ஒதுக்கீடு செய்யப்படும் சகல பணத்தொகைகளும்.

இ) தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கென வெளிநாட்டுக் கொடை தருநர் மற்றும் கொடை முகவர் நிலையங்கள் வழங்கும் கொடை மற்றும் நன்கொடைப் பணத்தொகைகளும்.



011899

ஈ) தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கென உள்ளூர் கொடை தருநரும், கொடை முகவர் நிலையங்களும் வழங்கும் சகல நன்கொடை மற்றும் கொடைப் பணத்தொகைகளும்.

உ) தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கென ஒப்படைக்கப்பட்ட காணிகளிலிருந்து கிடைக்கும் சகல வருமானங்களும்.

ஊ) நிதியத்துக்குச் சொந்தமான பணங்களை முதலீடு செய்வதாலும், ஏனைய வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் வைப்புச் செய்வதாலும் நிதியத்துக்குச் சேர்ந்து பெருகக்கூடிய சகல தொகைகளும்.

இந்நிதியத்திலிருந்து பின்வரும் விடயங்களுக்கு பணம் செலுத்தப்படும்:

i) நிதியத்தின் விவகாரங்களை முகாமைத்துவம் செய்வதற்கும், அதன் கருமங்களை நடத்துவதற்கும் ஏற்படும் செலவுகளை ஈடு செய்ய அவசியமான சகல பணத்தொகைகளும்.

ii) தென்-கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திப் பணிக்குழுவின் விவகாரங்களை முகாமைத்துவம் செய்யவும், அதன் கருமங்களை நடத்தவும் ஏற்படும் செலவுகளை ஈடுசெய்ய அவசியமான சகல பணத்தொகைகளும்.

iii) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கட்டிட வடிவமைப்பு, சேவைகள், இடப்பரப்பமைவு மற்றும் வளாகங்களின் உள்ளகங்கள் குறித்த ஆலோசனை சேவைகளுக்கும், தென்-கிழக்குப் பல்கலைக்கழகக் கருத்திட்டத்தின் கருத்திட்ட முகாமைத்துவத்துக்கும் செலுத்த அவசியமான சகல பணத்தொகைகளும்.

iv) தென்-கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பாட விதானங்கள் அபிவிருத்தி, கற்கை நெறிகளை ஏற்படுத்தல், விரிவுரை மண்டபங்களுக்கான உபகரணம் மற்றும் தளபாட வசதிகளை ஏற்படுத்தும் குறித்துரைப்புகளை வரைதல், வகுப்பறைகள், நூல் நிலையங்கள், ஆய்வு கூடங்கள், கேட்போர் கூடங்கள் மற்றுமு் கலாசார மற்றும் மாணவர் நிலையங்களை அமைப்பது குறித்த ஆலோசனை சேவைகளுக்குச் செலுத்த வேண்டிய சகல பணத்தொகைகளும்.

v) தென்-கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கட்டிடங்கள் நிர்மாணம், கட்டிட சேவைகள், அகநிலையமைவு, இடப்பரப்பமைவு மற்றும் உள்ளகங்கள் குறித்த ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குனருக்குச் செலுத்துவதற்கு அவசியமான சகல பணத்தொகைகளும்.

vi) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துக்கள், நூல்கள் மற்றும் விரிவுரை மண்டபங்கள், வகுப்பறைகள், நூலகங்கள், ஆய்வு கூடங்கள், கேட்போர் கூடங்கள் மற்றும் கலாசார மற்றும் மாணவர் நிலையங்களுக்கு அவசியமான கல்விப் பொருட்கள் ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களுக்குச் செலுத்துவதற்குத் தேவைப்படும் சகல பணத்தொகைகளும்.

v) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல் ஐந்து வருடகாலச் செயற்பாட்டுப்பகுதிக்கும் வருகை ஆலோசகர்கள், விஞ்ஞானிகள் மற்றும் கல்விமான்களுக்குச் செலுத்துவதற்கு அவசியமான சகல பணத்தொகைகளும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திலிருந்து பணங்களைப் பெற்றுக் கொள்ளுவது குறித்த விதிகளை ஆக்கும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இத்தகைய விதிகளுக்கு

இணக்கமாகவன்றி நிதியத்திலிருந்து எவ்விதப் பணங்களையும் பெற்றுக் கொள்ளல் இயலாது. பஞ்சாங்க வருடமே நிதியத்தின் கணக்கீடுகளுக்கான நிதி ஆண்டாகவிருக்கும்.

நிதியத்தின் முகாமைத்துவக் குழு வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிதியத்தின் ஏனைய சகல கொடுக்கல் வாங்கல்கள் குறித்த முறையான கணக்குப் புத்தகங்களைப் பேணுவதற்கு ஆவன செய்யும்.

பொதுக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை ஆய்வு செய்வது சம்பந்தமான அரசியலமைப்பு உறுப்புரை 154 இன் ஏற்பாடுகள் நிதியத்தின் கணக்காய்வுக்குப் பொருந்துவனவாகும்.

நிதியத்தின் வருமானம் வருமான வரி, வியாபார மொத்த வரி, மற்றும் சாதாரணமாக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குப் பொருந்தும் ஏனையவரிகள் என்பவற்றிலிருந்து விலக்குப்பெறும்.

தனிநபர்களினதும், அமைப்புகளினதும் நிதியத்துக்கான சகல கொடைகள், நன்கொடைகள், பங்களிப்புகளும், குறிப்பிட்ட தனிநபரின் அல்லது அமைப்பின் வருமானவரி நோக்கங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுக்கான கொடைகளாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

***நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பமைவு :***

| | | |
|---|---|---|
| கௌரவ.எம்.எச்.எம்.அஷ்ரப் | - | தவிசாளர் |
| நீதியரசர். ஜமீல் | - | நம்பிக்கைப் பொறுப்பாளர் |
| கலாநிதி. உவைஸ் அகமட் | - | நம்பிக்கைப் பொறுப்பாளர் |
| திரு.எம்.ஐ.எம்.மொஹிதீன் | - | நம்பிக்கைப் பொறுப்பாளர் |
| திரு.எம்.எல்.ஏ.காதர் | - | நம்பிக்கைப் பொறுப்பாளர் |

## பின்னிணைப்பு - 'இ'

## 1. தென்-கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான தலைமைத் திட்டம்


| கட்டம் 1 | அட்டவணைப் படுத்தப்பட்ட காலம் |
|---|---|
| அட்டாளைச்சேனையில் மேலதிக வசதிகள் | 1995 |
| ஒலுவில் வளாகத்தில் ஆரம்ப வேலைகள் | 1995 |
| ஒலுவில் நெற்சந்தைப்படுத்தல் | |
| சபைக் கட்டிடங்கள் புனரமைப்பு | 1995/1996 |
| தெருக்கள் - படிநிலை | 1995/1996 |
| மின்சாரம் - உபநிலையம் & படிநிலை/விநியோகம் | 1995/1996 |
| நீர் விநியோகமும் & அழுக்கு நீர்வடிகால் - படிநிலை-1 | 1995/1996 |
| இடப்பரப்பமைவு - படிநிலை - 1 | 1996 |
| நிர்வாகக் கட்டிடம் | 1996 |
| கலைப் பீடம் | 1996 |
| கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட வீடுகளில் மாணவர் தங்குமிடங்கள் | 1996 |

| கட்டம் 2 | |
|---|---|
| ஒலுவில் வளாகத்தில் மிகுதி வேலைகள் | 1996/1997 |
| பள்ளிவாசல் | 1997 |
| விஞ்ஞான பீடம் | 1997 |
| வாணிப மற்றும் வர்த்தக பீடம் | 1997 |
| தகவலியல் பீடம் | 1997 |
| மாணவர் வசதிக் கட்டிடங்கள் | 1997 |
| பதவியினர் இடவசதி | 1997 |
| மாணவர் விடுதிகள் | 1997 |
| கலாசார நிலையம் | 1997 |
| விளையாட்டுக் கூட்டுத்தொகுதி | 1997 |
| வர்த்தக நிலையம் | 1997 |
| தெருக்கள் - படிநிலை 2 | 1997 |
| மின்சாரம் - படிநிலை 2 விநியோகம் | 1997 |
| நீர்வழங்கல் & அழுக்குநீர் வடிகால் - படிநிலை 2 | 1997 |
| இடப்பரப்பமைவு - படிநிலை 2 | 1996/1997 |

**கட்டம் 3 ஏனைய வளாகங்களில் வேலை**

| | |
|---|---|
| கடல்சார் ஆய்வுகள் மற்றும் மீன்பிடியியல் பீடம், அட்டாளைச்சேனை | 1996/1997 |
| பொறியியல் மற்றும் கைத்தொழிற்பேட்டை பீடம், அக்கரைப்பற்று | 1996/1997 |
| விவசாய பீடம், சம்மாந்துறை | 1996/1997 |
| சட்ட பீடம், கல்முனை | 1996/1997 |
| மருத்துவபீடமும், போதனா வைத்தியசாலையும், பாலமுனை | 1997/1998/1999 |
| அறபு, மற்றும் இஸ்லாமியக்கல்விகள் பீடம், பொத்துவில் | 1996/1997 |
| பௌத்த தத்துவஞான பீடம், தீகவாபி | 1997/1998 |
| இந்து தத்துவஞான பீடம், திருக்கோவில் | 1997/1998 |

## 2. தென்-கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் வளாகம் நிர்மாண நடைமுறைப்படுத்தல் குழு



## 3. தென்-கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் வளாக உத்தேச நிர்மாண நடவடிக்கைத் திட்டம் - 1996

**நிதிக்கணக்கீடு**

**கட்டம் I**

| | |
|---|---|
| 1. காணி சுவீகாரமும், வேலியிடலும் | ரூபா. 20,000,000.00 |
| 2. நிலம் துப்புரவு செய்தல் | ரூபா. 2,000,000.00 |
| 3. நெற்சந்தைப்படுத்தும் சபைக் கட்டிடங்கள் புனரமைப்பு | ரூபா. 25,000,000.00 |
| 4. நீர்வழங்கலும், வடிகாலமைப்பும் | ரூபா. 3,000,000.00 |
| 5. மின்சாரம் | ரூபா. 2,000,000.00 |
| 6. தெருக்களும், கட்டமைப்புகளும் - கட்டம் I | ரூபா. 15,000,000.00 |
| 7. ஆலோசகர்கள் கட்டணங்கள் | ரூபா. 2,000,000.00 |
| 8. கருத்திட்ட முகாமைத்துவம் | ரூபா. 1,000,000.00 |
| மொத்தம் | ரூபா. 70,000,000.00 |

**கட்டம் II**

| | |
|---|---|
| 1. நிர்வாகக் கட்டிடம் | ரூபா. 40,000,000.00 |
| 2. கலை மற்றும் வர்த்தக பீடம் | ரூபா. 70,000,000.00 |
| 3. பிரதான வாயில் | ரூபா. 10,000.000.00 |
| 4. விஞ்ஞான பீடம் | ரூபா. 80,000,000.00 |
| 5. பதவியினருக்கான இடவசதிகள் | ரூபா. 15,000,000.00 |
| 6. இடப்பரப்பமைவு கட்டம் I | ரூபா. 5,000,000.00 |
| 7. ஆலோசகர்கள் கட்டணங்கள் | ரூபா. 9,000,000.00 |
| 8. கருத்திட்ட முகாமைத்துவம் | ரூபா. 1,000,000.00 |
| மொத்தம் | ரூபா. 230,000,000.00 |

**கட்டம் III**


| | |
|---|---|
| 1. மாணவர் விடுதி | ரூபா. 100,000,000.00 |
| 2. நூலகம் | ரூபா. 50,000,000.00 |
| 3. பள்ளிவாசல் | ரூபா. 50,000,000.00 |
| மொத்தம் | ரூபா. 200,000,000.00 |

| | |
|---|---|
| மொத்த மதிப்பீடு | ரூபா. 500,000,000.00 |

## 4. தென்-கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் வளாகம் நிர்மாணச் செயல்முறைத் திட்டம் - 1996

| விடயம் பணிகள் | இலக்குத் திகதிகள் |
|---|---|
| 1. நிதி ஏற்பாடுகள் - எம்/எஸ்பீஆர் & ஆர் | |
| அ. கட்டம் I - ரூபா. 70 மில்லியன் | 1996 மே 20 |
| ஆ. கட்டம் II - ரூபா. 230 மில்லியன் | 1996 ஜூன் 10 |
| இ. கட்டம் III - ரூபா. 200 மில்லியன் | 1996 ஜூலை 10 |
| 2. நியமனங்களும், பெயர் குறித்தலும், எம்/எஸ்பீஆர் & ஆர் | |
| அ. ஆலோசகர் | 1996 மே 10 |
| ஆ. பணிக்குழு | 1996 மே 10 |
| இ. ஒப்பந்தகாரர்கள் | 1996 மே 10 |
| ஈ. உப-ஒப்பந்தகாரர் | 1996 மே 10 |
| உ. ஒப்பந்த முகாமைத்துவ கோஷ்டி | 1996 மே 10 |
| 3. செயற்பாடுகள் - ஆலோசகர் | |
| அ. கேள்வி மனுக்கோரல் ஆவணங்கள் பூர்த்தி - படிநிலை I | 1996 மே 15 |
| ஆ. கேள்வி மனுக்கோரல் ஆவணங்கள் பூர்த்தி - படிநிலை II | 1996 ஜூலை 15 |
| இ. கேள்வி மனுக்கோரல் ஆவணங்கள் பூர்த்தி - படிநிலை III | 1996 ஆகஸ்ட் 15 |
| 4. ஒப்பந்தம் வழங்குதல் - எம்/எஸ்பீஆர் & ஆர் | |
| அ. கட்டம் I | 1996 மே 15 |
| ஆ. கட்டம் II | 1996 ஜூலை 15 |
| இ. கட்டம் III | 1996 ஆகஸ்ட் 15 |
| 5. செயற்பாடு - ஒப்பந்தகாரர்கள் | |
| அ. உப-ஒப்பந்தங்கள் வழங்குதல் - படிநிலை I | 1996 ஜூலை 31 |
| ஆ. உப-ஒப்பந்தங்கள் வழங்குதல் - படிநிலை II | 1996 அக்டோ 30 |
| இ. உப-ஒப்பந்தங்கள் வழங்குதல் - படிநிலை III | 1996 ஆகஸ்ட் 31 |


011899




SOUTH-EASTERN UNIVERSITY

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil
2. Date Scanned : 2018.02.15
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.15

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*